*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – IV, Issue - 1
November 2019

# திருமுருகாற்றுப்படை உணர்த்தும் அறுபடை வீடுகளின் சிறப்பு

அமுதவல்லி.ந
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்
தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author: amuthavalli@vvvcollege.org**

## ஆய்வு நோக்கம்

பத்துப்பாட்டு நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது திருமுருகாற்றுப்படையாகும். 317 அடிகளால் ஆசிரியப்பாவாலான இந்நூலைப் பாடியவர் நக்கீரர். இந்நூலின் சிறப்புக் கருதி சைவத் திருமுறைகளுள் பதினோராம் திருமுறையில் ஒன்றாக வைத்துள்ளனர். ஆற்றுப்படை நூல்களான பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய நூல்கள் அனைத்தும் ஆற்றுப்படுத்தப்படும் இரவலர் பெயரில் அமைய, இந்நூல் மட்டுமே பாட்டுடைத்தலைவனான முருகப்பெருமானின் பெயரில் அமைந்துள்ளது. இத்தன்மை தனிச்சிறப்பிற்குரியது. இந்நூல் ஆறுபகுதிகளாக அமைந்துள்ளது. முருகனின் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவேரகம் (சுவாமி மலை), திருஆவினன்குடி (பழனி), குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகிய அறுபடை வீடுகளின் சிறப்புக்களும் இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றம் முருகனின் அறுபடை வீடுகளில் முதலாவதாக கருதப்படுவது ஆகும். இக்குன்றம் மதுரை நகரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. மிகவும் உயரமான மலைப்பகுதியும், மரங்கள் அடர்ந்து செழித்த மலைச் சாரலுமாக **'மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கமாக'** அமைந்துள்ளது. இத்தகைய மலைச்சாரலில் வண்டுகளும், மொய்க்காத சுடர் போன்ற சிவந்த காந்தள் பூக்களால்

தொடுத்த மாலையை அணிந்தவனாக முருகப்பெருமான் காட்சியளிக்கின்றார். முருகனுக்கும், தெய்வயானைக்கும் திருமணம் நடந்த புண்ணிய தலமாக இவ்விடம் போற்றப்படுகின்றது. ஆகையால் முருகப் பெருமானின் தோற்றப் பொலிவை விளக்க வந்த நக்கீரர், கற்பு மிக்க தெய்வயானையின் கணவன் என்றும், கடம்ப மாலை புரளும் மார்பினன் எனவும் வர்ணிக்கிறார். இப்பகுதியில் முருகனின் திருவுருவச் சிறப்பு, முருகன் அணியும் மாலைகள், சூரரமகளிர் செயல்கள், முருகன் சூரபத்மனை வதம் செய்த திறன், திருப்பரங்குன்றத்தின் அழகு போன்றவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

திருப்பரங்குன்றம் இயற்கை எழில் பொருந்திய பகுதியாகும். இதனை நக்கீரர்,

"இருஞ்சேற்று அகல்வயல் விரிந்து வாய் அவிழ்ந்த
முள்தாட் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண் போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்"[1]

என்று குறிப்பிடுகின்றார். முருகப்பெருமான் தேவர்களைப் பாதுகாக்க சூரபத்மனை வதம் செய்தவர். இச்செயலையும் நக்கீரர் முருகனின் சிறப்பினை எடுத்துரைக்கும் போது பாடியுள்ளார். இக்கருத்தினைச்,

"செருப்புகன்று எடுத்த சேண் உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர் அருவாயில்"[2] (67-69)

என்ற வரிகள் குறிப்பாக உணர்த்துகின்றன.

"செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை"[3] உடையவனாக விளங்கினான் என்று முருகனின் வீரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றத்தில் வாழக் கூடிய சூரர மகளிரின் இயல்பு விளக்கப்பட்டுள்ளது. அவர்கள் தலையில் பூச்சூடி ஆடிப்பாடும் போது விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி எடுத்து முருகனை நினைத்து ஒருவர் மேல் ஒருவர் எறிந்து விளையாடுகின்றனர். அப்போது அவர்கள்,

"கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிது"[4] (38-39)

என்று அவனது கொடியின் பெருமையைப் பாடி ஆடுகின்றனர். நக்கீரர் முருகப்பெருமானின் அருளினைப் பெற விரும்பும் பக்தனின் வீடு பேற்றுக்கு வழிகாட்டும் விதமாக,

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரிக் கொள்கைப் புலம் புரிந்து துறையும்
செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே"[5]

என்று எடுத்துரைக்கின்றார். அதாவது முருகனின் திருவடிகளை நினைத்து மேன்மையான மனத்தோடு நல்வினைகளைச் செய்யும் கொள்கையோடு செல்பவனே. நீ விரும்பினால் வீடுபேறு வாய்க்கப் பெறுவதோடு நீ நினைத்த காரியங்களையும், நல்வினைப்பயனால் அடையப் பெறுவாய் என்று பக்தனை ஆற்றுப்படுத்தும் செய்தியும் திருப்பரங்குன்றம் பகுதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது நூலின் சாராம்சமே பக்தனை முருகனிடம் ஆற்றுப்படுத்துவது ஆகும். அதனை நக்கீரர் திருப்பரங்குன்றம் என்ற முதல் படைவீட்டிலேயே விளக்குகின்றார்.

இதனைத் திருப்பரங்குன்றம் என்ற படைவீட்டிற்குரிய சிறப்பம்சமாகக் கருத முடிகிறது.

**திருச்சீா் அலைவாய் (திருச்செந்தூா்)**

திருச்சீா் அலைவாய் முருகனின் அறுபடை வீடுகளுள் இரண்டாவதாகக் கருதப்படுகிறது. இப்பகுதியில் முதலாவதாக முருகப்பெருமானின் யானையின் தோற்றச் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. யானை விரைவான நடையினையும், கூற்றுவனை ஒத்த வலிமைத் தன்மை உடையதாகவும் காட்சி தருகிறது. யானையின் மீது முருகன் பவனி வந்து அடியவா்களுக்கு அருள் பாலிக்கிறாா். அதன் பின்பு முருகப்பெருமானின் ஆறு முகங்களின் செயல் வடிவம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மிகப்பெரிய இருண்ட உலகமானது எந்த விதக் குற்றமும் குறையும் இல்லாமல் சிறப்பாக விளங்குவதற்குப் பல கதிர்களை விரித்தது ஒருமுகம். ஒருமுகம் பக்தா்களின் குறை தீா்க்க காதலோடு மகிழ்ச்சியோடு வரமளிக்கிறது. ஒரு முகமானது அந்தணா்களின் வேள்வியை ஏற்றுக் கொள்கிறது. ஒரு முகம் திங்கள் போலத் தண்ணிய ஒளியோடு திசை முழுவதும் விளங்கச் செய்கிறது. ஒரு முகம் பகைவா்களை அழித்துக் கறுவு கொண்ட நெஞ்சோடு போா்க்களத்தில் வெற்றி பெறுகிறது. ஒரு முகம் வள்ளியை மணம் புணர, மகிழ்ச்சியோடு காணப்படுகிறது என்று முருகப்பெருமானின் ஆறுமுகங்களின் செயல்பாடுகளை நக்கீரா் வா்ணிக்கின்றாா். அடுத்தபடியாக பன்னிரு கைகளின் செயல்பாட்டினை விளக்குகிறாா்.

“விண்செலல் மரபின் ஐயா்க்கு ஏந்தியது
ஒரு கை; உக்கம் சோ்த்தியது ஒரு கை;
நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசை
அசைஇயதொரு கை;
அங்குசங் கடாவ ஒரு கை”[6]

என்று நக்கீரா் ஆறுமுகத்தோடும் பன்னிரு கைகளோடும் முருகன் திருச்சீரலைவாயில் தன் பக்தா்களுக்கு அருள்பாலிக்கும் தன்மையை எடுத்துரைக்கின்றாா்.

**திருவாவினன் குடி (பழனி)**

திருஆவினன் குடி என்ற ஊா் தற்போது உள்ள பழனியைக் குறிக்கிறது. இவ் ஊா் முருகனின் அறுபடை வீடுகளுள் மூன்றாவது வீடாகக் கருதப்படுகிறது. இப்பகுதியில் முருகனை வழிபட வரும் முனிவா்களின் தோற்றச் சிறப்பு, கந்தருவா், கந்தருவ மகளிா், திருமால், உத்திரன், முப்பத்து மூவா் ஆகியோரின் தோற்றச் சிறப்பும், செயல்பாடும் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாமையால் படைத்தற் கடவுளாகிய பிரமனைச் சிறையிலிட்ட புராணக்கதை இப்பகுதியில் சொல்லப்படுகிறது. அதனால் ஏனைய இரு கடவுளரும் தத்தமது தொழிலை ஆற்ற முடியாமல் திருவாவினன் குடி நோக்கி வருகின்றனா். அதனோடு தேவா்களுக்குத் தீங்கு விளைவித்த மூன்று அசுரருடைய முப்புரங்களையும் எரித்த சிவனின் கதையும், கௌதம முனிவரால் சாபம் பெற்ற இந்திரனின் கதையும் சொல்லப்படுகிறது.

**திருஏரகம்**

திருஏரகம் என்று நக்கீரரால் குறிக்கப்படும் சுவாமிமலை முருகனது

நான்காவது படைவீடாகும். இப்பகுதியில் நக்கீரர், முருகனை அந்தணர்கள் வழிபடும் முறையினையும், அவர்களின் இயல்புகள் குறித்தும் எடுத்துரைத்துள்ளார். அந்தணர்கள் ஓதல் முதலிய ஆறு வகையான தன்மை பொருந்தியவர்கள். அவர்கள் நற்குடியில் தோன்றியவர்கள். நாற்பத்தெட்டு வருடம் பிரம்மச்சரியம் மேற்கொண்டு இல்லற வாழ்க்கையைப் பயின்றவர்கள். நித்திய ஓமம் செய்பவர்கள். முக்காலமும் அறிந்தவர்கள். இரு பிறப்பாளர்கள். மேலும் அவர்கள் முருகனை வழிபடும் முறையையும் நக்கீரர் எடுத்துரைக்கின்றார். இதனை,

"உச்சி கூப்பிய கையினா் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப்பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்"[7]

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

**குன்றுதோறாடல்**

குன்றுதோறாடல் என்ற ஐந்தாம் படைவீட்டில் முருகன் வேலனாக வீற்றிருக்கின்றான். இப்பகுதியிலும் அவனது தோற்றச்சிறப்பு மிகவும் அழகாக விளக்கப்பட்டுள்ளது. இப்படைவீட்டில் மலைவாழ் மக்களான குறவர்கள் முருகனை வழிபடுகின்றனர். முருகனுக்குப் பூசை செய்யும் பூசாரி தலைமாலை உடையவனாய் நிற்கின்றான். குறவர்கள் நல்ல வாசனை மிகுந்த சந்தனத்தைப் பூசிக் கொண்டு மூங்கில் குழாய்களில் ஊற்றி நெடுநாள் ஊற வைத்து விளைந்த தேனால் ஆன கள்ளின் தெளிவைத் தம் சுற்றத்தாருடன் சேர்ந்து உண்டு மகிழ்கின்றனர். மேலும் அவர்கள் தொண்டகம் என்ற பறையை முழங்கி, அதன் ஓசைக்கு ஏற்ப குரவைக் கூத்து ஆடுகின்றனர். இதனை,

"கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடு அமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக்குரவை அயர"[8]

என்ற பாடலடிகள் இக்கருத்தை உணர்த்துகின்றன. மேலும் குறவர்களோடு தழையாடை, பூமாலை போன்றவற்றால் தங்களை அலங்கரித்துக் கொண்டு மயில் போன்ற சாயலை உடைய குறவர் இனப் பெண்களும் இணைந்து ஆடினர். இவர்களின் அலங்காரத்தை,

"முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மரா அத்த வால் இணர் இடையிடுபு
அரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஅ"[9]

என்ற வரிகள் விளக்குகின்றன. இவ்வாறு மலைவாழ் மக்கள் முருகனை வழிபட்ட தன்மையினை நக்கீரர் எடுத்துரைத்துள்ளார்.

**பழமுதிர்ச் சோலை**

பழமுதிர்ச் சோலை என்ற முருகனின் ஆறாம் படைவீடு மதுரைக்கு அருகில் அமைந்துள்ளது. இப்பகுதியில் முருகன் எழுந்தருளியிருக்கும் இடங்கள், ஆற்றுப்படுத்தும் முறை, முருகன் அருள் பெறும் வழி, அவன் அருள் புரியும் வகை போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

**முருகன் உறையும் இடங்கள்**

முருகன் தங்கியிருக்கும் இடங்களாக நக்கீரர்,

"ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரும் நிலையினும்

வேலன் தைஇய வெறியயர் களனும்
காடும் காவும் கவின் பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப் பூங்கடம்பும்
மன்றமும் பொதியினும் கந்துடை
நிலையினும்”[10]

போன்ற பகுதிகளைக் குறிப்பிடுகின்றார்.

வேலனுக்கு வெறியாட்டு நிகழ்த்துதல் என்பது பழந்தமிழ் மக்களின் சமய வழிபாட்டு முறைகளுள் ஒன்றாகும். அத்தகைய நிகழ்வை நக்கீரர் இப்பகுதியில் விளக்குகிறார். குறவர் இனத்தைச் சார்ந்த பெண் முருகு என்ற தெய்வத்தைத் தன் மீது வரவழைக்கும் விதமாக, மலைக்கோயிலில் கோழிக் கொடியுடன், மயிலையும் பொருத்தமாக அலங்கரித்தாள். வெண் சிறுகடுகை நெய்யுடன் கலந்து வாயிற்படிகளில் தடவினாள். தன் வழிபாட்டிற்குரிய தெய்வத்தின் மூல மந்திரத்தை மெதுவாக ஓதினாள். மலர்களைத் தூவி வணங்கினாள். வெவ்வேறு இரண்டு நிறமுடைய ஆடைகளை உடுத்தினாள். சிவந்த நூலைக் கையில் காப்பாகக் கட்டி, கொழுத்த கிடாயின் குருதி பிசைந்த தூய வெள்ளரிசியை சிறுபலியாக இட்டாள். மஞ்சளோடு சந்தனத்தைக் கலந்து தெளித்தாள். செவ்வரளி மாலையைத் தொங்க விட்டு, நளிமலைச் சிலம்பின் நன்னகரை வாழ்த்தி, வாசனைத் தூபம் காட்டி, குறிஞ்சிப் பண்ணைப் பாடினாள். அங்கிருந்த மக்கள் அருவியின் ஓசை போல் வாத்தியங்களை முழக்கினர். கண்டவர் அச்சம் கொள்ளும்படி இரத்தத்தோடு கலந்த தினையரிசியைப் பரப்பி வைத்துக் கொண்டு குறப் பெண் தெய்வமாடினாள். குறவர்கள் வெறியாட்டுக்களம் ஆரவரிக்கும் படியாக பலவித இசைக்கருவிகளை இசைத்து முருகனது ஓடாப் பூட்கை பிணிமுகத்தை (யானையை) வாழ்த்தினர். தாம் வேண்டியதைப் பெற்றனர். முருகன் அவ்விடத்தில் தங்கினான். முருகனைக் கையால் தொழுது வணங்கினர். மேலும் முருகனை,

“அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல் போர்க் கொற்றவை சிறுவ”[11]

என்று பலவாறாக வாழ்த்தினர். பூசை முடிந்த பின் இறுதியில் முருகப் பெருமான் தோன்றும் போது வேண்டுதல் வைத்தனர். ‘பெருமையுடைய முருகப் பெருமானே, அறிவு முதிர்ந்த சொற்களை உடைய யாசகன் ஒருவன் நினது பெரும் புகழைக் கூற விரும்பி, கேட்போர்க்கு இனிமையாகவும், நல்ல உறுதிப் பயனைத் தரத் தக்க திருநாமங்களை மிகப் பற்பலவாகச் சொல்லித் துதித்துக் கொண்டு வந்துள்ளான். ஆதலால் அப்புலவனும் நின்னருள் பெறத்தக்கவன் என்று கூறுகின்றனர். முருகனின் அருள் பெற விரும்பும் பக்தனுக்கு முருகனது அருள் கிடைக்க வேண்டும் என்ற குறவர் இன மக்களின் நல்லெண்ணத்தை உணர முடிகின்றது. திருமுருகாற்றுப்படையின் முக்கியக் கரு இவ்விடத்தில் நிறைவடைகிறது என்ற அதன் சிறப்பம்சத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது. அறுபடை வீடுகளிலும் காட்சி

தரும் முருகன் மீது மக்கள் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையைத் தெள்ளத் தெளிவாக உணர முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. திருமுருகாற்றுப்படை, பாடல் வரி : 72-76
2. மேலது, பாடல் வரி : 67-69
3. மேலது, பாடல் வரி : 5
4. மேலது, பாடல் வரி : 38-39
5. மேலது, பாடல் வரி : 62-66
6. மேலது, பாடல் வரி : 106-110
7. மேலது, பாடல் வரி : 185-189
8. மேலது, பாடல் வரி : 194-197
9. மேலது, பாடல் வரி : 201-204
10. மேலது, பாடல் வரி : 220-226
11. மேலது, பாடல் வரி :255-258